Registered as as News Paper

பக்கங்கள் 16 விலை ரூபா 5.00

PUBLIC LIBRARY
JAFFNA

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 1 (14.4.94) வியாழக்கிழமை ஓசை 55

## உயர்தர வகுப்புகள் தொடங்குமுன் அனுமதி பெறப் பணிப்பு

க. பொ. த (உ/த) வகுப்புக்களை புதிதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும் போது முன்கூட்டியே கோட்டக்கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஊடாக உரிய படிவங்களில் விண்ணப்பித்து அவரின் அங்கீகாரத்தை எழுத்து மூலம் பெற்றே புதிய வகுப்புக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று யாழ் வலயம் 2றினான கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி சகல அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் பணித்துள்ளார். மேலும் பாடசாலைகளில் க. பொ. த (உ/த) வகுப்புக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்போது விஞ்ஞானம், கலை, வர்த்தகப் பாடங்களையுடைய வகுப்பு ஒவ்வொன்றிலும் (9ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்புக் குண்டுவெடிப்புக்கள்

# குற்றப்புலனாய்வுப்பொலிஸார் 3 குழுக்களாக விசாரணை!




## இராணுவம் தாக்கியதில் பொதுமகன் பலி

(திருகோணமலை)

திருமலை மாவட்டம் மூதூரில் பனையாவில் என்ற இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த மாதம் 28 ம் திகதி பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வேல்கமம் மூதூரைச் சேர்ந்த அருளம்பலம் யோகநாதன் (30) என்பவரே கொல்லப்பட்டார். இவர் திருமணமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலையில்புலிகள் தாக்கு இரு இராணுவத்தினர் பலி

### ஆயுதங்களும் மீட்பு

(கொழும்பு)

திருக்கோணமலையில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர். இரு படையினர் காயமடைந்தனர். இராணுவத்தினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

இச் சம்பவத்தையடுத்து சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இப்பகுதியில் தாக்குதல் நடத்தியது.

## கொழும்பில் பாதுகாப்பு புதுவருடத்தில் தீவிரம்

## ஐந்து சிங்களவர்களும் கைது

[கொழும்பு]

கடந்த வெள்ளியன்று கொழும்பு ஹோட்டல்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள குற்ற புலனாய்வு பொலிஸார் மூன்று குழுக்களை அமைத்துள்ளனர்.

கல்கிசையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் இறந்த அருள்தாஸ் பற்றிய விபரங்களை அறியும் முயற்சியில் முதலாவது குழு ஈடுபடுகிறது இரண்டாவது குழு மகேந்திரன் மதிவாணன் பற்றியும் மூன்றாவது குழு ஹோட்டல்களில் குண்டுகளை வைக்க உதவியவர்கள் பற்றியும் விசாரணை செய்து வருகின்றன

இக்குண்டு வெடிப்புகள் தொடர்பாக மூன்று சிங்கள இளைஞர்களும் இரு சிங்கள பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மதிவாணனுடனும் அருள்தாசுடனும் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் வேறு நான்கு தமிழ் இளைஞர்களும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம் பெறுவதற்கு முதல் நாட்களில் அருள்தாஸ் (9 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகர் வடக்கே செல்வதை பாதுகாப்பு குழு விரும்பவில்லை

## மதிவாணன் வாக்குமூலம் இன்னும் பெறப்படவில்லை

(கொழும்பு)

கல்கிசை கடற்கரையில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற குண்டுவெடிப்பில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மகேந்திரன் மதிவாணனிடமிருந்து பொலிசார் இதுவரை எந்தவித வாக்குமூலத்தையும் பெற இயலவில்லை எனவும், அவரது உடல்நிலை படிப்படியாகத் தேறி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பின் போது மதிவாணனின் கால்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிளாலி-பூநகரிபடகுச்சேவை படகுகளை பதிவு செய்க

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைத் தத்தம் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இச்சங்கங்கள் இல்லாத இடங்களைச் சேர்ந்த படகு உரிமையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வருவாய்ப் பகுதியினருக்கும் நேரில் சமர்ப்பித்து தங்கள் உரிமையை உறுதிப்படுத்தி படகுகளைப் (9ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்த ராணுவம்மீது

## கொழும்பில் பாதுகாப்பு புதுவருடத்தில் தீவிரம்

(கொழும்பு)

புதுவருடத்தையொட்டி கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக அரசு தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கையை தீவிரமாக்கியுள்ளது.

## பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்க

### தென்கொரிய அமைச்சர் கோரிக்கை

இனப்பிரச்சினை மேலும் மோசமடையாமல் தடுக்கும் விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என்று தென்கொரிய அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

அண்மையில் கொழும்பிற்கு விஜயம் செய்த அவர் இலங்கையின் வெளியுற அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத்தையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை முதலீடுகள் தொடர்பாக ஆராயவே இவர் இங்கு விஜயம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக்குநீரிணையை நீந்தி தமிழக சிறுவன் சாதனை

(சென்னை)

இந்தியாவின் ராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாருக்கும் இடையேயான 32 கிலோ மீ. தூர பாக்கு நீரிணையைச் சென்னையைச் சேர்ந்த பன்னிரெண்டு வயதான பாடசாலை மாணவரான குற்றாலேஸ்வரன் பதினாறு மணி நேரம் இடைவிடாது நீந்திக் கடந்துள்ளார். அலையும், சுழியும் நிரம்பிய இக் கடற்பரப்பை நீந்திக் கடந்தவர்களில் குற்றாலேஸ்வரன் தான் வயதில் குறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் இரவு ஒன்றோகால் மணியளவில் தலைமன்னாரில்

(9ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு குழு விரும்பவில்லை

### ஜனாதிபதி டி. பி. முகமட்டிடம் கூறினார்

(கொழும்பு)

நான் வெளிநாட்டுப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கையில் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா யாழ்ப்பாண பயணத்தை ஒத்திவைக்குமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தார் என சிறிலங்கா பாராளுமன்ற சபா நாயகர் எம். எச். முகமட் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நான் நாடு திரும்பி ஜனாதிபதிக்கு எனது யாழ்ப்பாண விஜயத்தின் முக்கியத்துவம் தொடர்பாக தொலைபேசியில் எடுத்துக் கூறினேன். அப்போது அவர் எனது விஜயத்தை ஒத்திவைப்பதற்கு தகுந்த காரணத்தைத் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து ஜனாதிபதியை நேரில் சந்தித்து அவ் விஜயத்தின் முக்கியத்துவத்தை தெரிவித்தேன்.

அதற்கு அவர் தான் பாதுகாப்புக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் பாதுகாப்புக் குழு நான் யாழ்ப்பாணம் செல்வதை விரும்பவில்லை என தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

நான் யாழ்ப்பாணத்திற்குச் செல்வது இவ் அரசாங்கத்திற்கு நன்மையே தவிர ஒரு

(9ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கெதிராக தொண்டா சதி உடன் அவரை நீக்கவேண்டும்

### கூரேயிடம் செல்லச்சாமி கோரிக்கை

(கொழும்பு)

அமைச்சராக இருந்து கொண்டு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சதி முயற்சிகளை மேற்கொள்ளும் அமைச்சர் தொண்டமானை உடனடியாக வெளியேற்றுமாறு இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேக்கு எழுதிய கடிதம் மொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் அமைச்சராக இருந்து கொண்டு அரசாங்க கட்சிக்கு எதிரான சதித்திட்டமொன்றை வகுத்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ. தொண்டமானை ஆளும் கட்சியின் அமைச்சராக தொடர்ந்து வைத்துக்கொள்ளக் கூடாது எனவே உடனடியாக அவரை அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றவேண்டும் என அக் கடிதத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர்

(9 ஆம் பக்கம் பார்க்க)

களுக்கும், இச்சம்பவங்கள் இல

(9ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கியிருந்த ராணுவம்மீது புலிகள் இடீர் தாக்குதல்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டம் வேப்பங்குளத்திற்கும் பன்மதவாச்சிக்கும் இடையில் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தவென பதுங்கியிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இச்சம்பவம் நேற்றுக்காலை நடந்ததாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. இத் தாக்குதலையடுத்து இப்பகுதிக்கு மேலதிக துருப்புகள் வரவழைக்கப்பட்டதாகவும்

(9ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன் திருச்செல்வம் (இறையனார்)

திருகோணமலை மாவட்டம் 6ஆம் கட்டை எனும் இடத்தில் கடந்த 11ஆம் திகதி அன்று இரவு 9.00 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளிகள் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் ஒரு போராளி வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் திருச்செல்வம் । இறையனார் (சண்முகராஜா மோகனராஜ், திருகோணமலை, தற்போதைய முகவரி; முத்தையன் கட்டு, புதுக்குடியிருப்பு) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## எனது மகன் மட்டுமல்ல மகளும் நானும் அரசியலில் குதிப்போம்

### ஹேமா பிரேமதாச கூறுகிறார்

(கொழும்பு)

எனது மகன் மட்டுமல்ல நானும் மகளும் கூட பெரிய அளவில் அரசியலில் ஈடுபடவிருக்கின்றோம் என திருமதி ஹேமா பிரேமதாச கொழும்புத் தினசரி ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற எனது கணவரின் அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பங்களிப்புடன் முழுமையாக முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம் எனவும் அவர் அப் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

நீண்ட காலமாக பொதுஜன தொடர்பு ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொள்வதை தவிர்த்து வந்த ஹேமா பிரேமதாசவை தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக அப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

## இன்று மூடப்பட்டிருக்கும்

இன்று புதுவருடத்தை முன்னிட்டு அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டைப் பதிவுச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் திறக்கப்பட மாட்டாது என்பதை பொது மக்களின் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர்.

## பாராளுமன்றத் தேர்தல் முதலில் கட்சிகளைபலவீனபடுத்த அதுவேவழி

### ஐக்கிய தேசிய கட்சியினர் நம்பிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் பொதுத்தேர்தலை நடத்துவதன் மூலம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் பிளவை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஒக்டோபர் மாதத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து டிசெம்பர் மாதத்தில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கும் பின்னர் ஜனாதிபதி தேர்தலை ஜனவரி இறுதிக்குள் நடத்துவதற்கும் ஐ. தே. க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் பிளவை ஏற்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்

(9ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம்.
TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA. (இ-9053)

**வியாபாரிகட்கு**

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் சோடனை நகைகள், வேலி, நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதன பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை, 177 A, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-9071)

**கோல்டன் கொமட் குஞ்சு விற்பனை**

கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; "மலிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (8000)

**பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு**

லைவன் பிறவுண் ஒருமாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு "மலிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (8001)

**புத்தாண்டுப் பலன்களும் ராகு, கேது மாற்றமும்**

ரூ 10/- எங்கும் கிடைக்கும்; லைவிசேஷம்; எல்லா ராசிகளும் அடங்கியவை. உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்கள் கணித்துக் கொடுக்கப்படும்; T. V பாலா, சோதிட புத்தக நிலையம், இணுவில். (8017)

**தவறிவிட்டது**

26-02-94 அன்று ஆலடிக் கேணியில் எனது தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்; நடராசா கருணாகரன், கனுக்கேணி கிழக்கு, முள்ளியவளை. (8011)

**ஆங்கில மருத்துவம்**

சகலவிதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களினால் தினசரி காலை மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது; பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219, நாவலர்



## பிறந்த நாள் வாழ்த்து

### த.ஜவாஹரி

203/2 மின்சார வீதி, ஆரியாலையைச் சேர்ந்த ஜவாஹரி 14-4-94 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்;

இவரை அப்பா, அம்மா, அக்காமார், அன்பு அண்ணா, அம்மப்பா, அம்மம்மாமார், மாமா, சவூதியில் வசிக்கும் மாமா, மாமி, நவீன் மச்சான் மற்றும் அன்ரிமார்கள், அயலவர்கள், உறவினர்கள் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

- அன்ரிமார்.

(7914)



## MATHS CENTRE NELLIADY

### A/L 96

- Physics:- திரு. சூரியநாதன்

ஆரம்பம் : 14-04-94 வியாழன் நண்பகல் 12.00

- Chemistry:- திரு. வசீகரன்
- தூய/பிரயோக கணிதம் திரு. அருளானந்தம்

நேர அட்டவணை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும்; (5879)



## புதிய ஆண்டே புலிவீரர் யுகமாக தமிழீழம் மலர புறப்பட்டு வருக.

தளராத உறுதி மிக்க
தமிழர் வாழ்வுக்கு
வரலாறு படைத்திட
வருக, வருக "பவ" ஆண்டே !
உளமாக வாழ்த்தி
உன்னை வரவேற்கின்றோம்.
உரிமை கொண்டு வருக
அழகாக தமிழீழம் அமைய
அடிமை விலங்கிங்கு ஒடிய
ஆதரவாய் விளங்கிட வேண்டும்
புறம்பாடும் புலிவீரர் யுகமாக தமிழீழம்
புதிதாக இங்கு மலர
புதுமைகள் படைக்க வேண்டும்.

யாழ். வணிகர் கழகம்
21, வேல்மாடி சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

(இ-9145)



## O/L DAY CLASS

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

**15 ஆம் திகதி ஆரம்பம்**

- வாரத்தில் நான்கு நாட்கள் காலை 8-00 - பிற்பகல் 1-00 வரை
- சனி, ஞாயிறு இலவசமான விசேட கணித பாட செயலமர்வுகள்
- கடந்த 21 வருட பெறுபேறுகள் நிகழ்காலத்திற்கு சான்றாகும்.

**அனுமதிகள் விரைவில் நிறுத்தப்படும்.**

(இ-9152)



## புதிய கடைத்திறப்பு விழா

### BAWANI TUNERS

தனது சேவையை நாவலடி அல்வாய் என்ற முகவரியிலமைந்துள்ள ஸ்ரீ வள்ளி கட்டடத்தின் கீழ்த்தளத்தில் 14 4 94 வியாழன் காலை 7.35 மணி தொடக்கம் 8 35 மணிவரையுள்ள சுபவேளையில் ஆரம்பிக்கின்றது;

சிறந்தமுறையில் குறைந்த செலவில் வானொலி, மின் உபகரணங்களைத் திருத்திக் கொள்ள விஜயம் செய்யுங்கள்.

### BAWANI TUNERS

இங்ஙனம்
மு. அற்புதராசா (மாஸ்ரர்)

நாவலடி,
அல்வாய்; (இ-9153)


## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-14

1985-ம் ஆண்டு இதேதினத்தில் தமிழகம் நோக்கிச்செல்லும் வழியில் தமிழீழக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**லெப். தவேந்திரன்** (அமிர்தலிங்கம் சுந்தரகுமார்-லிங்கநகர்-திருமலை)
**சுசி** (சுப்பிரமணியம் சபேஸ்வரன் - 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு-திருமலை)
**சுனில்** (சேவியர் செனடி- 8-ம் வட்டாரம், சாம்பல் தீவு திருமலை)
**நேரு** (- மயில்வாகனம்- 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு-திருமலை)
**ரமணன்** (முத்து சிவபாலன்-தாமரைக்குளம், அடம்பன்-மன்னார்)
**செல்வம்** (பிலிப்பு பெனடிக் 1- ஆம்காட்டிவெளி, அடம்பன்-மன்னார்)
**லிங்கராசா** (சத்தியாஸ் எலியாஸ் -குஞ்சயங்குளம், அடம்பன்-மன்னார்)
**நடேஸ்மாமா** (முத்தையா நடராசா-பொலிகண்டி-வல்வெட்டித்துறை)
**கணேஸ்மாமா** (கந்தசாமி கணேசமூர்த்தி-பொலிகண்டிகிழக்கு-வல்வெட்டித்துறை)
**சுதா** (முத்துச்சாமி சுதாகர்-பொலிகண்டி குடியேற்றம்-வல்வெட்டித்துறை)
**கமல்** (அர்ச்சுனராசா நந்தகுமார்-பொலிகண்டி, ஓடக்கரை-பருத்தித்துறை)
**திலீபன்** (பொன்னுத்துரை யோகலிங்கம்-வசந்தகிரி, மயிலிட்டி-யாழ்)
**தம்பி** (வேலுப்பிள்ளை இராசகோபால் - முரளிவீதி, ஆவரங்கால்-யாழ்)

# புதுவருடம் பிறக்கிறது

நண்பர்கள் வருவார்கள்
உறவினர்கள் திரள்வார்கள்
அப்பாடா!
கடுமையான வெயில் காலம்
எதனைக் கொடுத்து உபசரிப்பது
குளிர்பானங்களை வழங்குவதுதானே சிறந்தது

மருத்துவ அகம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9016)

**விற்பனைக்கு**

கோழி, வான்கோழி முட்டைகளும், கோழிக் குஞ்சுகளும், வான் கோழிகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி.
(சி-9113)

**கண்ணுக்குக் கரிசலாங்கண்ணி**

கண்ணுக்குக் குளிர்ச்சி, பார்வைக்குக் கூர்மை, உடலுக்குக் குளிர்ச்சி, கேச வளர்ச்சிக்கு உறுதுணை கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணிக் கீரை வகை முன்னை ஒன்று ரூபா 10/- ''மில்க்வைற்''
(இ-9123)

**மிருதங்கம்**

தரமான மிருதங்கம் செய்ய வசதியான இடம் கோவிந்தபிள்ளை விஜயகுமார் மிருதங்க தொழில் நிலையம் 192/1 நாவலர் றோட் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம் (8021)

**திருத்துனர் தேவை**

மணிக்கூடு திருத்துவதற்கும் T.V திருத்துவதற்கும் ஆட்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி வீடியோ எஞ்சினியரிங் மெயின் வீதி நெல்லியடி கரவெட்டி (8026)

**உணவு சேவையில் ஒரு விசித்திரம்**

புத்தாண்டில் - சீனநாட்டு உணவுகள், ஈழத்தேயமேலைத்தேய உணவுவகை, சிற்றுண்டி உணவுகள் அருந்த, வைபவங்களை மகிழ்விக்க, நகரின் மத்தியில்; குடும்பமாக வந்து சுகாதாரமான இடத்தில் களிப்புற நாடவேண்டிய முகவரி Karunlya Chinese Hotel No 166 1st Cross Street Jaffna.
(8025)

## குளிர்பானங்களை வழங்குவதுதானே சிறந்தது

## இவ்வேளை எதனைத் தெரிவு செய்வது?

## என்பது தானே உங்கள் பிரச்சினை

# கவலையை விடுங்கள்

## இன்று எல்லோரும் விரும்பி அருந்தும் சுவையும் தரமும் மிக்க

# ºº புத்தூக்கி குளிர்பானங்கள் மட்டுமே

இவ்வேளையில் வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவரிற்கும் தமது புத்தாண்டு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள்

## புத்தூக்கி மென்பான தயாரிப்பாளர்கள்

**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி**

இல. 75/1, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி 9314)

ஆவரங்கால்-யாழ்)

**சுனி** (தவகி சற்குணராசா-சிறுப்பிட்டிதெற்கு, நீர்வேலி-யாழ்)

1988-ம் ஆண்டு கருவேலங்கண்டலில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**ராதா** (வேலுப்பிள்ளை சிவானந்தன்-பட்டிக்குடியிருப்பு, கருவேலங்கண்டல்-ஒட்டிசுட்டான்)

1989-ம் ஆண்டு யாழ்-கந்தர்மடம், ஆலடிச்சந்திப் பகுதியில் இந்தியப்படையினரின் முகாம் ஒன்றைத் தகர்க்க வெடிமருந்து அடங்கிய வாகனத்தைக் கொண்டு செல்லுகையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரமரணமடைந்த,

விக்ரமம் பொறுப்பாளர்,

**மேஜர் சுபாஸ்** (புண்ணியமூர்த்தி உதயகுமார்-நவாலி வடக்கு, மானிப்பாய்-யாழ்)

**கப்டன் சிறியண்ணா-தாடிசிறி** (முத்துராசா சிறிதரன்-சண்டிலிப்பாய் வடக்கு-யாழ்)

**லெப்.கரன் குட்டி** (நல்லையா பாஸ்கரன்-பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு-யாழ்)

**லெப்.அல்பேட்** (மருதப்பு ராஜ்குமார்-மலர்மகள் வீதி, அரியாலை - யாழ்)

முல்லை-விஸ்வமடுப்பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**இளங்கோ** (ஆழ்வாப்பிள்ளை ரவீந்திரன்-ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

யாழ்-கந்தர்மடம், ஆலடிச்சந்தி வெடிவிபத்தின் போது சாவடைந்த 06 பொதுமக்கள்,

நெல்லியடி-வதிரிச்சந்தியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொல்லப்பட்ட இருதயக் கல்லூரி மாணவத் தலைவனான வல்வெட்டித்துறை சமரபாகுவாசி,

இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கரம்பன் மேற்குப் பகுதி கிராம சேவையாளர்;

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவக் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கப்டன் காண்டீபன்** (சத்தியாமார்க் அல்பேட் மார்க் 1-ம் வட்டாரம், வங்காலை-மன்னார்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-9150)

ஆரம்பம்: 1919

PUBLIC LIBRARY
JAFFNA.

## அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்டம்

# பவள விழா - 1994

## 14 - 04 - 1994 வியாழக்கிழமை

(பவ வருடப்பிறப்பன்று)

**பகல் - விளையாட்டுப் போட்டிகள்:**

அரியாலை மத்திய விளையாட்டு மைதானம்

**இரவு - கலை நிகழ்ச்சிகள்:**

அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கு

பிரதிஷ்டா வித்வ ஜோதி, கிரியாசாகரம்
சிவஸ்ரீ. இ. சுப்பிரமணியக் குருக்கள்
பிரதம குரு. ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்
அரியாலை, யாழ்ப்பாணம்.

### ஆசியுரை

இவ்விழா இவ்வூர் மக்களையும்இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வல்லவர்களாக்குவது மட்டும் அல்ல, விளையாட்டுக்களிலும், கைப்பணிகளிலும் சிறப்புற்றவர்களாக்கிச் செயற்படுகின்றது. இதற்குக் காரணம் இவ்விழா ஆரம்பத்திலிருந்தே நன்றாகப் படித்த பெரியார்களும் இளைஞர்களும் ஊக்கமாக உழைத்தும் பல பெரியார்களின் ஆலோசனைகளைக் கேட்டும் நல்லனவற்றை ஏற்று, தீயனவற்றை விடுத்தும் நடாத்தி வந்த காரணத்தால் பல வளர்பிறைகளைக் கண்டு ஆலமரம்போல் விளங்குகின்றது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின்

### வாழ்த்துச் செய்தி

தமிழர்களுடைய கலை, கலாசார பண்பாட்டை வளர்க்கும் இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விழா தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென வாழ்த்திக்கொள்கிறேன்.
வாழ்க சுதேசியம்.

**கா. மாணிக்கவாசகர்**
01-04-94 அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபை முதல்வரின்

### ஆசியுரை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இப்பிரதேசம் அமைந்திருப்பது இம்மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களது கலாசாரப் பண்பாடுகளை அறியும் வாய்ப்பை எனக்குத் தந்துதவியது. பல சனசமூக நிலையங்களையும் விளையாட்டுக் கழகங்களையும் போற்றுதற்கரிய முறையில் நிர்வகித்து வரும் இப்பிரதேச மக்கள் தமிழர்களது சுதேசிய தினமாம் சித்திரை வருடப்பிறப்பு அன்று இவ்விழாவை எடுப்பது சாலப் பொருத்தமானதாகும்.

இப் பவளவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**ச. பொ. பாலசிங்கம்**
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

யாழ். பல்கலைக்கழக விவசாய
பீடாதிபதியின்

## (14-4-94) பகல் நிகழ்ச்சிகள்

# விளையாட்டுப் போட்டிகள்

இடம்:

**அரியாலை மத்திய விளையாட்டு மைதானம்**

**நேரம் : பிற்பகல் 2-00 மணி முதல்**

பிரதம விருந்தினர்கள்: திரு. C. தியாகராசா அவர்கள்
(உடற்கல்விப் பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழகம்)

திரு. இ. இளங்கோ அவர்கள் (உதவி அரசாங்க அதிபர், நல்லூர்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு. S. சதாசிவம் அவர்கள்
(ஓய்வுபெற்ற அதிபரும், விளையாட்டு வீரரும்.)

### விழாத் தலைவரது கருத்துக்கள். . .

அரியாலை மக்களால் கொண்டாடப்பட்டு வரும் இவ்விழா இன்று 75வது வருடத்தை அடைந்து நிற்கின்றது. தொடர்ந்து வளர்ச்சி நடைபோட எமது இளைஞர்களை அவாவி நிற்கின்றது.

நமது புத்திஜீவிகள் தமது கலைகலாசாரம், பண்பாடு என்பவற்றைப்பேணிக் காப்பதிலும், அதனை வளர்ப்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். மேற்கத்திய கலாசாரம் மதம் வலிந்து புகுத்தப்பட்ட பொழுது அவற்றைப் பூரணமாகவே எதிர்த்து தமது சமய பண்பாட்டை பாதுகாத்தவர்கள். அதைத் தொடர்ந்து பின்பற்றி வருபவர்கள் மேற்கத்திய நாகரீகத்தின் பிடியில் இருந்து தமது சுதேசிய கலை, கலாசாரம் விளையாட்டுத்துறை

## யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதியின்

## வாழ்த்துச் செய்தி

எமது ஊரில் பாரம்பரியமாக இருந்து வந்த சிறந்த கல்வி, அதன் மூலம் கிடைக்கப்பெற்ற உத்தியோகங்களும், நிர்வாகங்களும், சிறந்த விளையாட்டு அதன் மூலம் கிடைக்கப்பெற்ற வெற்றிகளும் பாராட்டுகளும், சிறந்த வீரம் அதன் மூலம் கிடைக்கும் நிம்மதியும் தொடர்ந்து பேணுவதற்கு இந்த சுதேசியதினக் கொண்டாட்ட விழாவானது ஒரு பாலமாகவும் உந்து சக்தியாகவும் இயங்கவேண்டும். அதனால் எம்மக்கள் கல்வி கற்கும் பாடசாலைகளும், எமது ஊரில் இருக்கும் பத்துக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களும், விளையாட்டுக் கழகங்களும் சிறந்து இயங்கவேண்டும். எமது கிராம எழுச்சியால் யாழ்ப்பாணம் மிளிரவேண்டும். இதனால் எமது பிரதேசம் சிறப்புறும். நமது சுதேசியமும் வளரும். நாமும் சிறப்புறுவோம்.

**கலாநிதி சு. மோகனதாஸ்**
பீடாதிபதி,
விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்,
பணிப்பாளர்,
வடமாகாண இணைக்கப்பட்ட கல்லூரி.

(ஓய்வுபெற்ற அதிபரும், விளையாட்டு வீரரும்.)

திரு. ச. முருகநேசன் அவர்கள்
(யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு செயலாளர்)

மாலை 5-30 மணி - பரிசில் வழங்கல்:
திருமதி யசோதரா தியாகராசா

## (14-4-94) இரவு நிகழ்ச்சிகள்

### இடம்: அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கு

நேரம்: இரவு 7-00 மணிமுதல்
மங்கள இசை: அரியாலையூர் K. T. S. மணியம் சகோதரர்கள்
கடவுள் வணக்கம்:
மௌன அஞ்சலி: மாவீரர்கட்கும், பொதுமக்களுக்கும்
சுதேசிய கீதம்இசைத்தல்
தலைமையுரை: விழாத்தலைவர் திரு. செ. பத்மநாதன்
வரவேற்புரை: கலாநிதி சு. மோகனதாஸ்
பரிசில் வழங்கல்: திருமதி இராதாதேவி பத்மநாதன்
கௌரவித்தல்: அரியாலைக்கு புகழ்தேடித்தந்தவர்கள் வரிசையில்

கல்வித்துறை: சத்திர சிகிச்சை நிபுணர்:
வைத்திய கலாநிதி ம. கணேசரட்ணம் அவர்கள்
விளையாட்டுத்துறை: திரு. S. K. சண்முகலிங்கம் அவர்கள்
சமூக சேவைத்துறை: திரு. செ. நடராசா அவர்கள்
திரு. சு. பாலசுந்தரம் அவர்கள்
கலைத்துறை: திரு. பொ. விஜயரட்ணம் அவர்கள்
திரு. V. செல்வரட்ணம் (செல்வம்) அவர்கள்
விசேட கௌரவிப்பு: ஸ்ரீ. சுப்பிரமணியக்குருக்கள்
திரு. K. T. சுப்பிரமணியம் (நாதஸ்வரம்)

சிறப்பு விருந்தினர் உரை
திரு S. T. பத்மநாதன்
திரு. வே. பாலகுமாரன்
(தமிழீழ கல்விமேம்பாட்டுக் கழகதுணைப் பொறுப்பாளர்)

கௌரவ விருந்தினர் உரை: பேராசிரியர் கலைப்பீடாதிபதி
கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்

நன்றியுரை:

கலை நிகழ்ச்சிகள்: < பரத நாட்டியம் >
(போட்டிகளில் முதற் பரிசு பெற்றவை

### அரியாலை நாடக மன்றம் வழங்கும்

விழாவினரின் பிரமாண்டமான தயாரிப்பு
பாஷையூர் கவிஞர் அ. தேவதாசின்

## ★ எல்லாளன் ★

(வரலாற்று கற்பனை நாடகம்)

### இனிய இசை விருந்து

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

ரீகத்தின் பிடியில் இருந்து தமது சுதேசிய கலை, கலாசாரம் விளையாட்டுத்துறைகளை புத்தூக்கம் கொடுப்பதற்காக தமிழர் திருநாளம் சித்திரை 1ம் நாள் சுதேசிய வருடப்பிறப்பு நாளைச் சுதேசிகளது நாளாகப் பிரகடனப்படுத்தினர். அது தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றது; தொடர்ந்து செல்லும்.

காதலும், வீரமும் சங்ககால சமூக ஒழுக்கமாக இருந்ததுபோல, அரியாலை மக்கள் விளையாட்டும், நாடகமும், கல்வியுமே அவர்களது சமூக ஒழுக்கமாக மாறியுள்ளது. இதற்கு எமது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவும், பிரதேசம் எங்கும் வியாபித்துள்ள சனசமூக நிலையங்களும் காரணிகளாக அமைந்துள்ளன இவ்வாறான பண்பாடுகள் நிறைந்த இப்பேரூரில் ஒருபங்காளனாக இருப்பதையிட்டு உண்மையில் பெருமையடைகிறேன். அதேநேரத்தில் இம்முறை நடைபெறும் பவள விழாவுக்கு தலைமை வகிப்பதையிட்டு, அவ் அளப்பரிய பணியை எமது தலைமையில் செயற்படுத்துவதற்கு அன்புக் கட்டளையிட்ட எமதூர் மக்களுக்கு-குறிப்பாக இளைஞர்களுக்கு இவ்விழாவை சமர்ப்பணம் ஆக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

(சி-9137)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த

# புதுவருட வாழ்த்துக்கள்


மங்களகரமான வைபவங்கள் எதுவானாலும்
உங்கள் ஆவல் அறிந்த சேவையை வழங்குகின்றார்கள்

எமது படப்பிடிப்பாளர்கள்.

(ஸ்ரூடியோ படப்பிடிப்பு, வீடியோ வெளிப்புறப் படப்பிடிப்பு)
உண்மையை நிஜமாக்கி தருபவர்கள்

கே. எஸ். ஆர்.
போட்டோஸ்

766, காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச்சந்தி.

குறிப்பு- தனி தொடிவ் படம் (SINGLE FRAME) பிரதியாக்கத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும். (இ-9130)

பி. ஐ. பர்னான்டோ

★ வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாக இளமைத்தோற்றத்துக்கும் அழகுக்கும் உரிய மூக்கு கண்ணாடிகளை விநியோகிப்பதற்கும்

★ பற்களைச் சிறந்த முறையில் கட்டுவதற்கும் நீண்டகால அனுபவம் உள்ள ஸ்தாபனம்



பி.ஐ.பர்னான்டோ

542, ஆஸ்பத்திரி வீதி,
(ஆஸ்பத்திரி பிரதான வாயில் முன்பாக)
யாழ்ப்பாணம்.



(இ-9184)

:: விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்

எரிக் கணேஷ்

(மூக்கு கண்ணாடி விற்பனையாளர்)

புடவைத் தெரிவுகளுக்கு
கைராசியான நிறுவனம்

=ராக மாலிகா=

ஆடை அகம்

4, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம். (இ-9140)

புத்தம் புதிய யூனியன் (Union)
250kg மேடைத் தராசுகள்
விற்பனைக்குண்டு

சாமுவேல் சன்ஸ் அன்
கம்பனி லிமிட்டட்

206, 208, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (இ-9133)

தற்கால நாகரிகத்திற்கேற்ற வகையில்
தயாரிக்கப்பெற்ற

❋ நாகரிகப் பொருட்கள்
❋ விளையாட்டுப் பொருட்கள்
❋ அன்பளிப்புப் பொருட்கள்

யாவும் நிதான விலையில் பெற்றிட

பெஷன் ஹவுஸ்

65, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (இ9160)

நவீன புடவைத் தெரிவுகளுக்கு
நீங்கள் விரும்பிய வண்ணம்
தெரிவு செய்ய

விக்னேஸ் பிடவை மாளிகை

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(இ-9131)

சகல விதமான பெயின்ற் வகைகளுக்கும்
யாழ்நகரில்
தலைசிறந்த ஓர் நிறுவனம்

நியூ சிற்றி
ஹாட்வெயர்ஸ்

245, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இ-9142)

உங்கள் பாதணி தேவைகளான

பாட்டா, டி எஸ் ஐ, றண்பா, உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்

ஆகியவற்றை தெரிவு செய்து பெற்றிட
பாதணி தேவைகளுக்கோர் முன்னோடி

சரவணாஸ்
பாதணி நிலையம்

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (இ-9139)

(மூக்கு கண்ணாடி விற்பனையாளர்)
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (இ-9182)

சிறந்த வகையான

- மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- CD-200 மோட்டார் சைக்கிள்களுக்குரிய ஒரிஜினல் பெயின்ற் வகைகளை

நீங்கள் பெற்றுக்கொள்ள

மோட்டார் சைக்கிள் பிரியர்களுக்கோர் வரப்பிரசாதம்

நியூ சுபமாலா மோட்டோர்ஸ்
79, அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

ஜயகீதா மோட்டோர்ஸ்
245, அர்ச்சுனாவீதி,
யாழ்ப்பாணம்.

(இ-9141)

இன்றைய நாகரிகத்தோடு இணைந்த இயற்கை எழிலூட்டும் பலவர்ண

- பட்டாடைகள்
- ஜவுளி தினுசுகள்
- சேட் ஜீன்ஸ்
- வேட்டி சால்வைகள்

மற்றும் சிறுவர்களுக்கான றெடிமேட் அயிட்டங்கள்
புதுப்புது டிசைன்களில் தெரிவுசெய்து நீங்கள் பெற்றிட

யோகாமணி ஆடை அகம்
16 B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: இத்தாபனம் 11-4-94 தொடக்கம் இல. 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது

(சி-9154)

இன்னல்கள் நீங்கி இல்லம் மகிழ்ந்து
நாடு சிறக்க
நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்

யாழ்ப்பாணம். (இ-9129)

PUBLIC LIBRARY
JAFFNA.

# "சித்திரை வருடப் பிறப்பும், எமது மண்ணில் சுதந்திர தமிழீழ மலர்வும்"

நமது நாட்டில் சித்திரை வருடப்பிறப்பு தொன்று தொட்டுக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் சித்திரையில் பிறக்கும் புதிய ஆண்டுக்குப் பஞ்சாங்கக் கணிப்பில் ஒவ்வொரு பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்படுவது மரபாகப் பேணப்பட்டு வருகின்றது.

அதேவேளை தமிழர்களின் திகதி ஆண்டாகத் திருவள்ளுவர் ஆண்டு குறிப்பிடப்படுகின்றது. இத் திருவள்ளுவர் ஆண்டும் தைப்பொங்கல் பண்டிகையுடன் தொடர்புடையதாக முன்னோரால் கணிக்கப்பட்டு வந்துள்ளமை அவதானிக்கத் தக்கதொன்று.

உதாரணத்திற்கு இவ் வருடம் திருவள்ளுவர் ஆண்டு 2025 எனக் கணிக்கப்பட்டுள்ளது. கடந்த தைமாதப் பிறப்புடன் இது 2025ஆம் ஆண்டாக வளர்ந்தது. இதே போன்று சிறீமுக வருடம் இன்றுடன் (14-4-94) சித்திரை 1ஆம் திகதி பவ வருடமாக மலர்கிறது.

இவ்வாறு உலகக் கூறுகளில் வாழும் பல்வேறு மொழி-கலாசார பரிமாணங்களைக் கொண்ட மனித இனங்கள் வெவ்வேறு காலக்கூறுகளில் தமது வருடப்பிறப்பை நிர்ணயித்தும், திகதி அட்டவணையை வகுத்தும் வந்துள்ளமை கண்கூடு.

இவ்வாறு கொண்டாடப்படும் திருநாட்கள் மக்களின் தொழில் - வருவாய் சார்ந்தும், ஓய்வு காலங்களைக் குறித்தும், காலநிலைக்கேற்பவும் நிர்ணயிக்கப் பட்டவையாக இருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பல்வேறு இனங்கள் வாழ்கின்ற நாடாக இருந்த போதும், பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களும் சித்திரை வருடப்பிறப்பையே புதிய வருடமாக பன்னெடுங் காலமாகக் கொண்டாடி வருகின்றனர்.

சித்திரை 1 ஆம் திகதி மலரும் புதிய ஆண்டை நம் நாட்டில் வாழும் இரு வேறு கலாசாரக் கூறுகளைக் கொண்ட தமிழர்களும், சிங்களவர்களும் கொண்டாடி வருவது இரு சாராரிடையேயும் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவனவாக அமையவில்லை.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்-சிங்கள மக்களிடையே பிளவு தோன்றி இன்று அந்தப் பிளவு விஸ்வரூபம் எடுத்திருப்பதும் அவதானிக்கத் தக்கதொன்றாகும்.

பெரும்பான்மையினர் பக்கமிருந்து எமது மண்ணில் யுத்தம் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் இந்நிலையில் சித்திரை வருடப்பிறப்புக் கொண்டாட்டம் தமிழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இராது.

அனைத்து தமிழ் மக்களும் எமது மண்மீட்பை முன்னெடுத்து சுதந்திர தமிழீழம் மலர்வித்த நாளே மகிழ்ச்சியைத்தர வல்லதாக அமையும்.

**'கவிகரன்'**

சகல இல்லங்களிலும் புத்தாண்டு மகிழ்ச்சி பொங்கட்டும்!
ஒளி இல்லம்
(அந்தியகால சேவைகள்)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் நவநாகரீக புடவைத்தினிசுகளைத் தெரிவுசெய்ய அன்றும்- இன்றும் என்றும்
அஜந்தாஸ்
54, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

யோகாமணி ஆடை அகம்
உங்கள் ஆடைத்தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்ய புதிதாக அமைகிறாள்
இம்மாதம் 21ஆம் திகதி வியாழன் முதல் இல: 32, கஸ்தூரியார் வீதி, முகவரியில்
யோகாமணி ஆடை அகம்
இல : 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

ஸ்கைறோஸ்
(ஒலிப்பதிவுக்கூடம்)
அதிபழைய பாடல்கள், புதியபாடல்கள் மற்றும், ஹிந்தி சிங்கள-ஆங்கிலப் பாடல்கள் உடனுக்குடன் பதிவுசெய்து கொடுக்கப்படும்.
பதிவுசெய்துள்ள பாடல்களை வாங்கவும்
★ யாழ். நகரில் ஒரே இடம்
ஸ்கைறோஸ்
இல. 1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மதிய உணவு வகைகள், சைனீஸ் உணவு வகைகள் மற்றும் உங்கள் கொண்டாட்டங்களுக்குத் தேவையான மேல்நாட்டு, கீழ்நாட்டு உணவு வகைகளும் மலிவு விலையில் ஆடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.
கிறீன்லன்ட் உணவகம்
GREENLAND CAFE
(4ம் ஆம் குறுக்கு வீதிச் சந்தி)
இல: 190, பிரதானவீதி, யாழ்நகர்

பவ ஆண்டில் தமிழர்தம் வாழ்வுகளும் விடியட்டும் என்று வாழ்த்துகின்றோம்! தரத்தில் குறையாத தங்க நகைகளைப் பெறுவதற்கு என்றும் எம்மை நாடுங்கள்.
லலிதா நகைமாளிகை

சுவைமிகு சுத்த சைவ உண்டிகளுக்கு நாடுங்கள்

புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக.
மரக்கறி, மீன், இறைச்சி, புரியாணி - நூடில்ஸ் உணவு வகைகளுக்கும் -
குளிரூட்டப்பட்ட பியர், ஸ்ரவுட் வகைகளை அருந்தவும் தெரிவு செய்யுங்கள்.
★ நிப்பொன் சீன உணவகம் ★
326, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கு எமது சித்திரை வருட வாழ்த்து.
குளிர்பானம், குளிர்களி மற்றும் சிற்றுண்டி வகைகளுக்குப் பெயர் பெற்ற இடம்.
லிங்கம் கூல் பார்
(வெலிங்டன் சந்தி,)
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

22 கரட் தங்கத்தில் ஆடர் செய்து நகைகளைப் பெறவும்-நவீனரக வெள்ளிப் பாதசரங்களை பல விதங்களில் தெரிவு செய்யவும் நாடுங்கள்
கயல்விழி நகைப் பூங்கா
224B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ரெடிமேட், சகலவித பட்டுப் புடைவைகளையும் எங்களுடன் இணைந்து தெரிவு செய்யுங்கள்

வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்
அஜந்தா
போட்டோ அன்ட் வீடியோ
63, சங்கிலியன் வீதி, நல்லூர்

சகல விதமான பதிப்பக வேலைகளுக்கும்
சாந்தி அச்சகம்
575, கே. கே. எஸ், வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

சகல விதமான பொருள்களையும் தெரிவு செய்திட நாடுங்கள்
ராஜூ ஸ்ரோர்ஸ்
(Raju Building)
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்

புத்தாண்டு வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!
நவீன துணிவகைகள், றெடிமெட் ஆடைகளுக்கு
நியூஹப்பி ரெக்ஸ்
(வைரவர் கோவிலடி)
146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

மளிகைப் பொருள்கள், புடைவை அலுமினியம் பொருள்கள் எதுவாகிலும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
வே. ம. சி. களஞ்சியம்
ஆலடிச்சந்தி, மானிப்பாய்

சகலவிதமான வர்ண, கறுப்பு - வெள்ளை புகைப்படங்களுக்கு இன்றும் - என்றும்
"குணம் போட்டோ"
(உபதபால் நிலையம் முன்பாக)
சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய்

வாடிக்கையாளர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
நதியா ஜூவல்லறி
(ஸ்ரான்லி வீதிச்சந்தி)
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்று வாழ்த்துகின்றோம்! தரத்தில் குறையாத தங்க நகைகளைப் பெறுவதற்கு என்றும் எம்மை நாடுங்கள்.

## லலிதா நகைமாளிகை

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

சிறீகிருஷ்ணபவான்
(சத்திரத்துச் சந்தி)
171, (37) கே. கே. எஸ்.
வீதி, யாழ்நகர்

---

## கயல்விழி நகைப் பூங்கா

224B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

## நதியா ஜுவல்லறி

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், நண்பர்கள், தொழிலாளர்களுக்கும் தங்கும் மங்களம் நிலைத்திட புதுவருட வாழ்த்துக்கள் கூறுகிறோம்!

## ஆர். வி. ஜி. பீடிகம்பனி

58, குறுக்கு வீதி, நல்லூர்
கிளை: ஆர். வி. ஜி. மருந்தகம்
504, மருத்துவனை வீதி, யாழ்ப்பாணம்.

---

ரெடிமேட், சகலவித பட்டுப் புடைவைகளையும் எங்களுடன் இணைந்து தெரிவு செய்யுங்கள்.

## சிற்றி காமன்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி.

தொழிலகம்:
"சிவபதி", இணுவில்.

---

கட்டடப் பொருள்கள் மற்றும் பெயின்ற் வகைகளுக்கு

## முருகன் வர்த்தக நிலையம்

21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

---

பாடசாலை உபகரணங்கள், பான்ஸி பொருள்கள்மற்றும் நவீன முறையில் பாடல்களைப் பதிவு செய்தல்-தரமான வீடியோ படப் பிரதிகளை வாடகைக்குப் பெறவும்

## வீடியோ எக்கணோமி

303, பலாலி வீதி,
திருநெல்வேலி

---

வாடிக்கையாளர்கள், சுவையருவி, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழீழ மக்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

மீண்டும் 16 - 4 - 94 - ல் எமது ஆலை தொழிற்படத் தொடங்கும்

## சிந்துஜா அரைக்கும் ஆலை

கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி

---

மளிகைப் பொருள்களை
மலிவு விலையில் பெற்றிட

## கரன் வர்த்தக நிலையம்

772, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்

---

சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
கர்ப்பிணித் தாய்மார்கள் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தை வளர்க்கிறது எமது தயாரிப்புகளில் ஒன்றான "ஜீவாகாரம்"

## அண்ணா தொழிலகம்

இணுவில்

---

கேக், குளிர்பான தயாரிப்பு
பொருள்கள் விற்பனையாளர்

## கணேஷா வர்த்தக நிலையம்

65, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்

---

அனைத்து தமிழீழ மக்களுக்கும் இன்று மலரும் புதிய பவவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

மளிகைப் பொருள்களின் விற்பனைக் களஞ்சியம்

## வி. எஸ். பீ. குறூப்

266 A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

---

பிளாஸ்ரிக், இரும்பு பொருள்களின் விற்பனை முகவர்

## ஜெசிபா ஏஜன்சி

132, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்!

# எஸ். வி. முருகேசு

எம்மிடம் பெயின்ற் வகைகள், வீடியோ கசற், அரம் மற்றும் மருந்து வகைகள், மளிகைப் பொருள்களை மலிவு விலையில் பெற்றிட நாடுங்கள்!

158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி. 9088)

திக்கெட்டும் தமிழ் மணம் கமழ! மக்கள் மனம் மகிழ!!

தித்திப்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்!!!

**வியாபாரிகளே!**

உங்கள் வியாபாரத்திற்கேற்ற தரமான பொருட்களை
மொத்தமாக கொள்வனவு செய்து கொள்ள . . .

# சேரன் பல்பொருள் வாணிபம்

| அர்ச்சுனாசாலை, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. | கண்டி வீதி, கொடிகாமம். | காங்கேசன்துறைவீதி, சுன்னாகம். |
|---|---|---|---|---|

**விவசாயிகளே!**

உங்கள் உற்பத்திப்பொருள்கள் நற்பலனைத்தந்திட உங்களுக்குத் தேவையான விவசாய
இரசாயனப் பொருள்களை மலிவாகப் பெற்றுக்கொள்ள

# சேரன் விவசாய இரசாயன வாணிபம்

காங்கேசன்துறை வீதி - சுன்னாகம்

**இயந்திரப் பாவனையாளர்களே!**

உங்கள் இயந்திரங்களுக்கு சரி பொருத்தமான உதிரிப்பாகங்களை
எம்மிடம் கேளுங்கள் . . .

# விக்ரர் இயந்திர உதிரிப்பாக வாணிபம்

அரிச்சுனாசாலை - யாழ்ப்பாணம்

**ஆடை வகைகளுக்கோர் இடம்!**

மனம் கவரும் வண்ண நிறங்களில் சின்னஞ்சிறுவர் தொடக்கம்
பென்னம்பெரியோர்வரை தெரிவுக்கேற்ற புடைவை வகைகள்

# எமினி புடவை வாணிபம்

# எழினி புடவை வாணிபம்

லெப். கேணல் இராசன் தெரு - யாழ்ப்பாணம்

---

**சில்லறைப் பொருள்களுக்கோர் இடம்!**

உங்கள் அன்றாட தேவைகளுக்கான சில்லறைப் பொருள்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள

# யாழ்ப்பாணன் விற்பனை நிலையம்

அர்ச்சுனாசாலை - யாழ்ப்பாணம்

---

சகல மருந்து வகைகளை மொத்தமாகக் கொள்வனவுசெய்து
உங்கள் வியாபாரத்தைப் பெருக்குங்கள்

# சேரன் மருந்து வாணிபம்

அர்ச்சுனாசாலை - யாழ்ப்பாணம்

---

**புத்தாண்டில் ஒரு முத்தான செய்தி!** **வெகுவிரைவில்!**

வீட்டுப் பாவனைப்பொருள்கள், பாத்திரங்கள் முதலியவற்றிற்கு புதிய வாணிபம் - அர்ச்சுனாசாலையில் அவசரப்படாதீர்கள்! ஆயத்தமாகவிருங்கள்.

*இ / 9091*

PUBLIC LIBRARY
JAFFNA

## மங்கலகரமான திறப்பு விழா

இல: 6 காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் "இ. சுப்பிரமணியம் மிதிவண்டி காட்சி அகம்"
நாளை 15-04-1994 வெள்ளிக்கிழமை இரவு 9-19 – 10-19ற்குமிடைப்பட்ட சுபவேளையில்
யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி அவர்களால் திறந்து வைக்கப்படும்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்

எ ம து பு த் தா ண்

லுமாலா ஏசியா ஹீரோ றலி

இறக்குமதித் தரத்துடன் உங்கள் சவாரிக்கு




- மிதிவண்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும்.
- தரம்மிக்க மிதிவண்டி உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் வகைகள்.

நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள

எ ம து பு த் தா ண்

டு வாழ்த்துக்கள்

நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள



# இ.சுப்பிரமணியம்

- மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம்.
  இல.8. காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்
- மிதிவண்டி காட்சி அகம்.
  இல.6. காங்கேசன் துறைவீதி, சுன்னாகம்

குறிப்பு: எமது மிதிவண்டி காட்சி அகம் இரவு 7-30 மணி வரை திறந்திருக்கும்.

மண்ணிலே வித்தான மாவீரர் புகழ் வாழ்க!
எண்ணரிய செயல்வீரன் எம்தலைவன் பெயர்வாழ்க!
கண்ணிமைபோல் எமைக்காக்கும் போராளிகள் வாழ்க!
வண்டமிழ் ஈழத்தில் வாழ்தமிழர் நலம் வாழ்க!
விடுதலையைத் தாங்கிவரும் புத்தாண்டே வருக! வாழ்க!

சி | 9049

டு வாழ்த்துக்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த

## புதுவருட நல்வாழ்த்துக்கள்

மலரும் புதுவருடத்தில்;





உங்கள் பயணத்தை விரைவுபடுத்த ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் வகைகளையும்

சைக்கிள்களுக்கான சகல வகை உதிரிப்பாகங்களையும்

தேவைகளுக்கேற்ப மொத்தமாகவும் சில்லறையாகவும்
நீங்கள் பெற்றிட
நாடவேண்டிய இடம்

# வெங்கடேஸ்வரா

79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (சி-9126)

---

இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்

★ ஆதரவாளர்களின் ஆவல் அறிந்த சேவை!

★ மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடவைகள்!!

★ இறக்குமதிசெய்யப்பட்ட ஆடைத் தினுசுகள்!!!

அனைத்திலும் குறைந்த விலையில்
நிறைந்த மகிழ்வுடன் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

# மதுரா பட்டு மகால்

75, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# சோபனா ஆடை அகம்

16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-9109)



மகிழ்ச்சி பொங்கும்

இம் மங்கள பொன்னாளில்

சீருடனும் சிறப்புடனும்

எதிர்காலம் திகழட்டும்

என வாழ்த்துகின்றோம்



| | | | | |
|---|---|---|---|---|
| சுவையருவி வெதுப்பகம் சிற்றம்பலம் நகர் | சுவையருவி லெப். கேணல் இராசன் தெரு | எழிலகம் லெப். இளங்கோ தெரு | சுவையருவி அருச்சுனா சாலை | சுவையருவி பேருந்து நிலையம் நெல்லியடி |

| | | |
|---|---|---|
| படமாடம் அருச்சுனா சாலை | சுவையருவி கோழிப் பண்ணை லெப். கேணல் இராசன் தெரு | மின்வளம் லெப். கேணல் சந்தோசம் வீதி |
| நீர்நிதி ஐந்துசந்தி, மானிப்பாய் வீதி | இரும்பு விற்பனை அகம் அருச்கனா சாலை | பசுஞ்சோலை லெப். கேணல் இராசன் தெரு |
| மலிவகம் மாசையூர் | மலிவகம் சிற்றம்பலம் நகர் | மலிவகம் நாவாந்துறை |





(சி-9127)

PUBLIC LIBRARY
JAFFNA.

### சிந்தனைக்கு

இன்பத்தை வென்று பெறவேண்டும். அல்லது உழைப்பினால் ஈட்டிப் பெறல் வேண்டும். ஒருவர் தானமளித்து அதைப் பெறமுடியாது.

-- திமித்ரி பிஸ்ஸெரேவ்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2028

தபால் பெட்டி எண் 05

# எதிர்கால சுபீட்சத்திற்கு வழி சமைப்போம்

வழமை போலவே பிறக்கும் புத்தாண்டு சுபீட்சமான, சுதந்திரமான வாழ்விற்கு வழிசெய்ய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும் அவாவுமாகும். பல வருடங்களாகப் போரின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இவ்வாறாக எண்ணுவது நியாயமானதே.

ஆனால் மக்களின் இவ் அபிலாசைகள் இன்றைய அரசியல் சூழ்நிலையில் எந்தளவிற்குச் சாத்தியமானது என்பதில் பல கேள்விகள் இருக்கவே செய்கின்றன. சிறிலங்கா அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்கள்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையும் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற அதன் முடிந்த முடிவும் மக்களின் இவ் அபிலாசைகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளன.

சிறிலங்கா அரசு தமிழ்ப் பிரதேசங்கள் மீதும், தமிழ் மக்கள் மீதும் விதித்துள்ள பொருளாதாரத் தடையானது அவர்களின் அன்றாட வாழ்வையே சிதைத்துவிட்டுள்ளது. எரிபொருள் தடை, போக்குவரத்துத்தடை, கடல்வலயத் தடைச்சட்டம் என்பன தொழில் வாய்ப்புக்களை நாசம் செய்து அவர்களின் வருமானத்தை இல்லாது ஒழித்துள்ளது.

இந்நெருக்கடியில் இருந்து விடுபடும் வரை தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வென்பது சாத்தியமாவது கடினமானதே. பொருளாதாரத்தடையும், முற்றுகையும் உடைக்கப்படும் போதே எமது தேசம் சுபீட்சமான வாழ்வை நோக்கிச் செல்ல முடியும். அப்பொழுதே மக்களின் பொருண்மிய வாழ்வில் உயர்வும் முன்னேற்றமும் தோன்ற வழிபிறக்கும்.

ஆனால் இன்று சிறிலங்கா அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையானது மேலும் மேலும் தமிழ்மக்களின் வாழ்வைசிதைத்து அவர்களின் தேசியத்தை அழித்துவிடும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது. இதற்கென சிறிலங்கா அரசு பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டும் வருகின்றது.

# ஈழத்தமிழ் அகதிகளை விரட்ட தமிழக அரசே முனைந்து நிற்கிறது

(சென்னை)

ஈழத் தமிழ் அகதிகள் விடயத்தில் தமிழ் நாடு அரசுதான் நெருக்கடியைக் கொடுக்கிறது மத்திய அரசு பொறுமையாக இருக்கிறது என்று மனித உரிமைக் குழுக்கள் கூறுகின்றன.

ஆனால் தமிழ் நாடு அரசு இந்தக் குற்றச் சாட்டை மறுக்கிறது. இலங்கையிலுள்ள அகதி முகாம் நிலைமைகள் இதை விட மோசமாக இருப்பதால்தான் அவர்கள் இங்கே இருக்க விரும்புகிறார்கள் என்று தமிழ் நாடு அரசு தரப்பில் கூறப்படுவதாக பி. பி. ஸி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு திரும்பிவந்த அகதிகள் தமிழ் நாடு அகதி முகாம்களில் வாழும் தமது உறவினர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தயவு செய்து நாங்கள் எடுத்த முடிவு மாதிரி எடுத்து இங்கு திரும்பி வந்து விடாதீர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். நாடு திரும்பிய அகதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் அச்ச உணர்வுடன் வாழ்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுவதாக பி. பி. ஸி தெரிவிக்கிறது.

முகாம்களுக்கு வெளியில் வாழும் சுமார் 40,000 அகதிகள் தம்மை அகதிகளாகப் பதிந்திருக்கிறார்கள். இவர்களைவிடப் பதிவு செய்யாத அகதிகள் முகாம்களுக்கு வெளியில் சுமார் 50,000 பேர் இருக்கிறார்கள். இவர்கள்தான் இப்போது பிரச்சினை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐ.தே.க. உறுப்பினர் பேசாது இருக்கக்கூடாது

—அமைச்சர் விஜயபால மென்டிஸ்

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் வாய்மூடி ஊமையாக இருக்கின்றார்கள் இவர்களை ஊமையாக இருக்க வேண்டாம் என நான் இவர்களிடம் தெரிவித்தேன் என சிறிலங்கா போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெடிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர் இடையேயிதனை தெரிவித்தேன். ஆனால் அன்றும் இவர்கள் ஊமையாகவே இருந்தார்கள். நான் இப்படி இருக்க போவதில்லை. ஏனெனில் நான் கட்சிக் கொள்கைக்கு அமையவும் கட்சியின் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டும் செயல்படுகின்றேன். என்னை ஒருவராலும் கட்சியை விட்டு வெளியேற்ற முடியாது.

பலப்பிட்டிய தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தென்மாகாணசபை தேர்தலானது பிரேமதாசாவின் கொள்கையை நடைமுறைப் படுத்தத் தவறியமை மற்றும் அதனை நினைவூட்ட மறந்தமையினால் மக்களால் கொடுக்கப்பட்ட தண்டனை நான் மட்டுமே பலப்பிட்டியவில் மக்களுக்கு அதனை நினைவுபடுத்தியதினால் இவ் ஆசனத்தில் (தொகுதியில்) வெற்றி கிடைத்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுமிமீது பாலியல் வன்முறை இளைஞருக்கு மரணதண்டனை

பன்னிரண்டு வயதுச் சிறுமியை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்த கந்தசாமி சிறிதரன் என்பவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இவ் வழக்கை விசாரித்த நீதிபதி திரு. கோ. ஜனகன் மேற்படி மரண தண்டனை விதித்து தீர்ப்பு கூறுகையில் பாலியல் வன்முறைக் குற்றம் சுமத்தப்பட்ட க. சிறிதரன் மன்றின் முன்னிலையில் ஓர் குற்ற ஒப்புதலைச் செய்துள்ளார். அக்குற்ற ஒப்புதல் யாதெனில், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமியான செல்வி கல்விக்கரசியின் சம்மதத்துடன் தான் உடலுறவு செய்ததாகவும் இது முதல் முறையல்ல இதற்கு முன்பும் இவ்வாறு நிகழ்ந்தது என்றார்.

இராது இவ் ஒப்புதலில் சம்மதம் இருந்தது என்ற சொற்பதத்தை ஓர் பாதுகாப்பாக எதிரி கருதினார். ஆனால் அதற்கு நீதிபதி சாட்சிகளை விளங்கிய பின் விளக்கம் அளிக்கையில் சம்பவதினம் எதிரியின் வீட்டில் பிறந்தநாள் வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு கல்விக்கரசியின் பெற்றோர் வருகை தந்திருந்த காரணத்தினால் கல்விக்கரசி தனியாக வீட்டில் இருக்க வேண்டிய ஓர் சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அவ்வேளையில் அங்கு எதிரி சென்றுள்ளார். அத்தோடு அச்சிறுமியுடன் உடலுறவு கொண்டிடயமும் குற்ற ஒப்புதலின் அடிப்படை அம்சங்களாகும். ஏனெனில் எதிரியின் வாதம் அச்சிறுமியுடன் தான் சம்மதத்துடனே உடலுறவு கொண்டதென்பதாகும். ஆனால் 2ஆம் சாட்சியின் கூற்றுப்படி கல்விக்கரசி வீட்டில் என்ன நிகழ்ந்தது என்பது தனக்குத் தெரியாதென்றும் எதிரி அங்கிருந்து ஓடிச்சென்றதை கண்டதாகவும் கூறினார். இதன் பிரகாரம் சம்மதத்துடன் உடலுறவு நடைபெற்றிருந்தால் எதிரி ஓடிச் செல்ல வேண்டிய அவசியம்

எதிரி இக் கூற்றை கூற வேண்டிய காரணத்தை கவனித்துள்ளது அடுத்து 1ம் சாட்சியான பாதிக்கப்பட்ட கல்விக்கரசி கூறுகையில் எதிரி தன் வாயைப் பொத்தி அறைக்குள் இழுத்துச் சென்று தன்னை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கினார்; என்றும் தான் இது சம்பந்தமான எதிரியின் வீட்டில் நின்ற தன் தாயிடம் சென்று உடனே கூறியதாகவும் சாட்சியம் கொடுத்தார். எதிரிக்கு சம்மதம் கல்விக்கரசியால் கொடுக்கப்பட்டிருந்தால் கல்விக்கரசி தாயிடம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்காது. அடுத்து மருத்துவ அறிக்கைப்படி பலவந்த புணர்ச்சியை உறுதிப்படுத்தியது எனவே சாட்சிகளின் பிரகாரம், சான்றுகளின் பிரகாரம் எதிரிக்கு சிறுமியின் சம்மதம் இல்லாமல் பலவந்தமாகவே அவளுடன் உடலுறவில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரியவருகிறது என்றார்.

மேலும் இங்கு குற்றம் சாட்டப்பட்ட பிரிவுக்கு சிறுமியின் சம்மதம் உண்டோ, இல்லையோ என்பது அவசியமற்றது என்றார். அதாவது தமிழீழ சட்டக் கோவை பக்கம் 30 பிரிவு 1 (2) கூறுகிறது 14 வயதை பூர்த்தி செய்யாத பெண்ணின் சம்மதத்தைப் பெற்றும் அல்லது பெறாமலும் உடலுறவு செய்வது பாலியல் வன்முறைப் புணர்ச்சியாகும்: என்கிறது. எனவே இப் பிரிவின் பிரகாரம் எதிரி பாலியல் வன்முறைக் குற்றம் புரிந்தார் எனக் கூறி தமிழீழ சட்டக் கோவை பக்கம் 80 பிரிவு 03 (அ)ன்படி பாலியல் வன்முறைக் குற்றவாளிக்கு உயர்ந்த பட்ச தண்டனையாக மரண தண்டனை விதிக்க தீர்ப்பளித்தது; மேலும் தீர்

# கடற் கரும்புலிகள் உருவப்படம் திறப்பு

கிளாலி கடற்பரப்பில் காவியம் படைத்த கடற்கரும்புலிகளான மேஜர் வரதன், கப்டன் மதன் ஆகியோரின் உருவப் படத் திரை நீக்கம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கிளாலி மக்கள் இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் முதல் நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் ஏற்றி வைத்தார். கடற்புலிகளின் கொடியைகடற்புலிகள் யாழ். மாவட்டத் தளபதி திரு. ஈஸ்வரன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மேஜர் வரதன், கப்டன் மதன் ஆகியோரின் உருவப்படங்களை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள் திரைநீக்கம்செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தார். இதன் பின் மக்கள் மலரஞ்சலி செலுத்திய பின்னர் வீரவணக்கக்கூட்டம் ஆரம்பமானது. கடற்புலிகள் வலிகாமம் கிழக்கு உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. சதீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அரசியல் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந் நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

## மே நாள் - 1994 முன்னோடிஏற்பாடு

இவ் வருடத்திய மே நாளை எழுச்சிமிக்க நாளாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கான கருத்தரங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலக பணிமனையில் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## குற்றப்புலனாய்வுப்

### சபாநாயகர்

குறையும் வரமாட்டாது என ஜனாதிபதியிடம் வற்புறுத்திக் கூறினேன்

பாதுகாப்புச் சூழ்நிலை முடிவுக்கு எதிராக ஒரு போதும் தன்னால் செயல்பட முடியாது என்றும் எனவே எனது விஜயத்தை ஒத்திப் போடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்

இதன் பின்னர் நான் ஜனாதிபதியிடம் என்னுடைய சபாநாயகர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டு யாழ்ப்பாணம் செல்லப்போகிறேன் என்றும் எனது முயற்சிக்குப் பதவி தடையாக இருப்பதை விரும்பவில்லை என வற்புறுத்தினேன் ஜனாதிபதி அதைக் கூட ஒத்துக் கொள்ளவில்லை.

எனது விஜயத்தை ஒத்திப் போட்டதற்குக் காரணம் பாதுகாப்பு என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் நான் விடுதலைப் புலிகளை முழுமையாக நம்புகிறேன்,

அரசாங்கம் உங்கிருவாளூர் இலை தரமறுத்தால் தனிப்

...துள்ளது.

அரசின் இந்நிலைப்பாடானது அண்மைக்காலத்தில் இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வுகளை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவற்றையும் தோல்வியுறச் செய்துள்ளது. இச் சமாதான முயற்சியில் உள்நாட்டை வெளிநாட்டைச் சேர்ந்த பல்வேறு வகை அமைப்புக்களும், மற்றும் சில வெளிநாட்டு அரசுகளும் கூடத்தீவிர அக்கறை காட்டின; ஆனால் அரசாங்கம் மட்டும் அதில் எந்த விதமான கரிசனையும் காட்டாமல் இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது;

சிறிலங்கா ஜனாதிபதி நிராகரித்த சமாதான முயற்சிகளில் சபாநாயகர் எம்.எச்; முகமட்டின் முயற்சியானது முக்கியமானதாகும்; முதலில் அனுமதி வழங்கியிருந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இறுதியில் தடை விதித்தமையானது இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வுகாணப்படலாம் என்ற நம்பிக்கை இல்லாது ஒழித்துவிட்டது.

அத்தோடு தென்மாகாணசபைத் தேர்தல் டி.பி. விஜேதுங்காவின் கொள்கைக்கு தோல்வி கிட்டிய போதும் இனப்பிரச்சினை விவகாரத்தில் அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாக இல்லை. இதனை அவர் வெளிப்படையாக அறிவித்தும்விட்டார்.

இதற்கு ஏற்றால் போல் சிறிலங்கா ஆயுதப்படையினரும் போருக்கான பெரும் ஆயத்தங்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிகின்றது. பெருமளவு நவீன ஆயுதக் கொள்வனவின் மூலம் நவீனப்படுத்தப்பட்டு வரும் ஆயுதப்படையின் ஆட்பலத்தையும் அதிகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன; அத்தோடு போருக்கு ஏற்ற வகையில் இராணுவ கட்டமைப்பையும் மாற்றி அமைத்துள்ளது;

இந்நிலையில் புத்தாண்டில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கு பெரும் தடைகற்கள் தெளிவாகவே தெரிகின்றன.

இந்நிலையில் இப்புத்தாண்டில் தமிழ்மக்களுக்கு சுபீட்சமானதும், சுதந்திரமானதுமான வாழ்வுகிட்டுமா என்பது குறித்து சிந்திக்க வேண்டியே உள்ளது ஆனால் அடுத்தடுத்து வரும் புத்தாண்டுகளிலாவது சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கான தீவிர முயற்சிகளில் அவர்கள் இவ்வாண்டு ஈடுபட முடியும். ஈடுபடவும் வேண்டும்; அப்பொழுதுதான் தமிழ்மக்கள் எதிர்காலத்திலாவது நிம்மதியாகப் புத்தாண்டுகளை எதிர்கொள்ள வழி பிறக்கும்;

## குற்றப்புலனாய்வுப்

கொழும்பில் உள்ள ஆடம்பர ஹோட்டல்கள் பலவற்றிற்கு சென்று வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். குண்டுகளை வைப்பதற்கான இலக்குகளை தெரிவு செய்யும் நோக்கில் வேவு பார்ப்பதற்காகவே இவர் ஹோட்டல்களுக்கு சென்றதாகவும் கொழும்பு நகரில் இரகசியமாக இயங்கும் புலிகளின் ஒரு குழுவுக்கு உதவியாக செயற்படும் பல்வேறு துணைக்குழுக்களே ஹோட்டல்களுக்குள் குண்டுகளை கடத்திச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் கருதுகின்றனர்.

தன்னை ஒரு வர்த்தகராக காட்டிக்கொண்ட அருள்தாஸ், சிங்களவர் பலருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்; இதற்கு மதிவாணன் உதவியிருக்கிறார். மதிவாணன் விமான சேவை முகவர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர். நீண்டகாலம் கொழும்பில் வாழும் இவர் இலகுவாக தன்னை பலருக்கு அறிமுகப்படுத்தினார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்;

## பாக்குநீரிணை

கடலில் குதித்து நீந்தத் தொடங்கிய அவர் நேற்று மாலை 5 15 மணியளவில் தனுஷ்கோடிக்கு அருகே கரையேறினார்;

கேட்டுள்ளார்;

## பாராளுமன்றத்

பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என சில ஐ.தே.க உறுப்பினர்கள் மேலிடத்திற்கு ஆலோசனை தெரிவித்ததை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

அடுத்துவரும் மாதங்களில் ஐக்கிய தேசிய கட்சி தேர்தல்கள் குறித்து தனது முழுக்கவனத்தையும் செலுத்தும் என்றும், புதிய முறையிலான தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிகளின் பலவீனத்தை அறிந்துகொண்டு அவற்றைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூறினர்;

## அரசிக்கெதிராக

காமினிரஸின் பொதுச் செயலாளர் தானே என்றும் சென்ற பொதுத் தேர்தலில் இக் கட்சியின் சார்பில் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் தான் ஒருவர் மட்டுமே என்றும் ஏனையவர்கள் தேசியபட்டியல் மூலம் வந்தவர்கள் என்றும் எனவே தொண்டமானால் தன்னை எந்த சட்டத்திலும் வெளியேற்ற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13-04-1994**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1648

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

27-5863, 24-4361, 24-6168, 27-2761, 24-6439 24-5177;

செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது; அடுத்து மூன்றாம்சாட்சியான கல்கிசரகிவின் தாய் கூறுகையில் அன்றைய தினம் தான் எதிரியின் வீட்டில் நின்றபோது எதிரி தன்னிடம்வந்து உங்கள் வீட்டை நான் பிடித்து நெருப்பு பற்ற வைக்க போனேன் அதனை அயலவர்கள் பார்த்தார்கள் என்றும் இதனால் ஏதாவது பிரச்சினை வருமோ தெரியாதுஎன்றும் கூறினார்; இக்கூற்று பிள்ளையின் தாயை குழப்பத்தில் ஈடுபடச் செய்தாலும் இதனை அவர்கள் பெரிது படுத்தவில்லை;

மன்றின் கவனத்திற்படி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-04-14 வியாழன் இரவு

8,01 ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''எங்கள் 'மனங்களில் என்றும் அன்னை பூபதி''

8.10ற்கு - உரை-வாழ்வும் குறிக்கோளும்

8-20ற்கு - உழைப்போம் உயர்வோம் 'தண்ணீரூற்று கிராமத்தின் குதூகலம் கலந்துரையாடல்''

8.30ற்கு - செய்திகள்.

8.40 ற்கு - யாழ் ஆலடிச் சந்தி வெடிவிபத்து நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''ஆலடியில் காற்றாகிய வர்''

1994-04-15 வெள்ளி காலை

7.02ற்கு-மாவீர வணக்கம்

7.15 ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''புரட்சிப் புயல் பூபதித் தாய்''

7.25 ற்கு - விடுதலைக் கானங்கள்

7.45 ற்கு - செய்திகள்

7.50 ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7-55 ற்கு- தாயகப்பாடல் என்பன இடம் பெறும்;

தீர்ப்பளித்தது; மேலும் தீர்ப்பை நீதிபதி விபரிக்கையில் இச் சிறுமிக்கு 12 வயது இப் பிள்ளையின் பிஞ்சு உள்ளத்தில் பதியப்பட்ட கசப்பான உணர்வுகளையும் அப் பிள்ளையின் எதிர்காலமும், அதன் விளைவுகளும் ஒரு பெண்ணுக்கு தமிழீழத்தில் உள்ள சுதந்திரத்தையும், உளவியல் ரீதியில் இக் குற்றத்தை ஆராய்ந்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நோக்கத்தையும் தனது தீர்ப்புக்கு ஆதாரமாக்கி 40 நிமிடங்கள் மன்றின் தீர்ப்பை வாசித்தார்.

## பதுங்கியிருந்த

தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் திலாவெளிப் பகுதியில் படையினர் மீது பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் இப்பகுதியில் உள்ள ஜேர்மன் வானொலி நிலைய வாகனத்தை கடத்திச் சென்ற விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது

வவுனியாவில் நேற்று முன்தினம் இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டாக தேடுதலை போட்டு தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் எவரும் கைதாகவில்லை.

## உயர்தர

குறைந்தபட்சம் 15 மாணவர்களுக்கு மேல் இருக்கவேண்டும் க.பொ.த உயர்தர வகுப்பு பாடங்கள் கற்பிக்கப்படும் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அப் பாடசாலைகளிலேயே தொடர்ந்து கற்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் உடனடியாக க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பாடசாலை அதிபர்களை மேலும் பணித்துள்ளார்; (17)

...தரமறுத்தால் தனிப்பட்ட நபர்களின் உலங்கு வானூர்தியை வாடகைக்கு அமர்த்திக்கூட செல்ல நான் தயார். இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தேன் இதற்கும் அவர் விரும்பவில்லை;

மீண்டும் அண்மையில் ஒரு முறை ஜனாதிபதியைச் சந்தித்து யாழ் விஜயத்திற்கான அனுமதியைப் பெறுவது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன் அதற்கும் அனுமதி தர ஜனாதிபதி மறுத்தால் வடக்கு கிழக்கு யுத்தத்தை நிறுத்த சமாதான முயற்சியில் உருப்படியாக ஈடுபட அரசாங்கம் தவறிவிட்டது என்பதை முழு உலகமும் தெரிந்து கொள்ளும்.

நாம் பேச்சுவார்த்தைக்கு தயாரானால் மட்டுமே இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்படும் நாம் சண்டையைத் தீர்மானித்தால் சண்டைதான். ஆனால் அதற்கும் புலிகள் தயாராகத்தான் இருக்கிறார்கள் என சபாநாயகர் எம். எச்; முகமட் தெரிவித்தார்;

## கிளாலி பூநகரி

பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்:

படகுகளின் பதிவை உறுதிப்படுத்தி, படகுப் பதிவாளர்களால் வழங்கப்பட்ட கடிதத்தை படகுச் சேவைப் பொறுப்பாளர்களிடம் கையளித்தால் மட்டுமே படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

பதிவு செய்யப்படாத படகுகள் கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட இசைவளிக்கப்படமாட்டாது.

படகுகள் பதிவு செய்யப்படும் இடங்கள் (1) கிளாலிப் படகுத்துறை, (2) குஞ்சுப் பரந்தன், நல்லூர் படகுத்துறை. நேரம்: 9-00 மணி தொடக்கம் 4-00 மணி வரை காலம்: 16-04-1994 தொடக்கம் 18-04-1994 வரை;

PUBLIC LIBRARY
JAFFNA.

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
09 - 07 - 1963

மறைவு:
14 - 04 - 1985

**வீரவேங்கை திலீபன்**
**பொன்னுத்துரை யோகசிங்கம் (பாப்பா)**

சேது சமுத்திரத்திலே நீ செங்களமாடினாய்,
திரும்ப நீ பிறக்கும்போது இங்கே ஈழம் மலர்ந்துவிடும்
உன்னுடன் மரணித்த வேங்கைகளுக்கும் அஞ்சலி

"வசந்தகிரி" தாயார், சகோதர, சகோதரிமார்,
மயிலிட்டி வடக்கு, அத்தான், அண்ணிமார்,
மயிலிட்டி. (8006) பெறாமக்கள், மருமக்கள்

---

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்:
31-12-1928

மறைவு:
22-4-1993

**இரத்தினம் அபூர்வசிங்கம்**
(முன்னாள் ப. நோ. கூ. ச. கிளை மனேஜர்)
திதி: 14-4-1994

அன்பினால் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி
ஆல்போல் பரவி நின்று
ஆறுதலும் எமக்களித்து
பாசமுடன் எமைவளர்த்து
பாரினிலே தவிக்க விட்டாயப்பா
உனையிழந்து நாமிங்கு
உற்றதுயர் கொஞ்சமல்ல
நீங்காது துயரம் ஓராண்டே கடந்தாலும்
தாங்காது கவலை, ஆறுதலே கூறிடுவாய்!

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள்
அன்பு கலந்த புதுவருட வாழ்த்துக்கள்.

- நிழற்படபிரதி (போட்டோஸ்ரட்)
- கல்லச்சு (றோணியோ)
- தமிழ், ஆங்கில அட்டச்சு
- ஸ்ரிரன்சில் வேலைகள்
- பாடசாலை உபகரணங்கள்

அனைத்திற்கும் நாடுங்கள்

↓

**சுடர்**

இல 22, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
(8029)

---

## 5ஆம் வருட நினைவஞ்சலி



**லெப்டினன்ட் கரன்**
**[ ந. பாஸ்கரன் சூட்டி ]**

பிறப்பு: **18-12-1968** வீரச்சாவு: **14-04-1989**

எண்ணம் முழுக்க வீரம் சுரக்க
திண்ணம் மிகுந்து புறப்பட்ட வீரனே
வண்ணம் மிக்க உன்முகம் தேடி - நம்

---

ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி
நிதிக்காக
**"ராசி சில்க்ஸ்"**
ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும்
உதைபந்தாட்டம்

# 1-வது அரை இறுதி ஆட்டம் - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 14 - 04 - 94
நேரம்:- இரவு 7. 15 மணி

சிறப்பு விருந்தினர்: வெ. இளங்குமரன்
(பொறுப்பாளர், தமிழீழ கல்விக் கழகம்)

பங்குபற்றும் அணிகள்:
1 யாழ் பல்கலைக்கழகம் எதிர்
சென்மேரிஸ்

பிரவேசம் ரூபா 25-00
சிறுவர்களுக்கு மட்டும் 10 00

★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன்
சிதைந்துகிவிய சிறார்களுக்கும் உதவுங்கள்
(கி-9041)

---

இனிய புதுவருட வாழ்த்துக்கள்

தரமான புதிய வெளியீடுகளை
சிறந்த முறையில்
நீங்கள் பெற்றிட

**குணம்**
**வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-9138)

---

## பிரத்தியேக வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் பிற்பகல் வேளைகளில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. கல்வியில் பின் தங்கிய மாணவர்களுக்கென நடாத்தப்படும் இவ்வகுப்புக்கள் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடை பெறுவதாகவும், ஆண்டு 5 லிருந்து ஆண்டு11 வரையான சுமார் 75 மாணவர்கள் இதனால் பயன்பெற்று வருகின்றனர்.
(2 2)

---

## அறிவித்தல்

14 - 04 - 1994
குலுக்கப்பட விருந்த
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
விவேகானந்தா
சனசமூக நிலைய
அதிர்ஷ்டலாபசீட்டிழுப்பு
தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளது.
குலுக்கல் திகதி.
27. 5. 94 ஆகும்.
உங்கள் ஒத்துழைப்பிற்கு
நன்றி.

(8032) - நிர்வாகம்

---

இன்றுயாழ் வட்டவியோ கழகத்தின் சமூக சேவை நிதிக்காக தமிழ் புதுவருடதினத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக முத்தான பல புதியபாடல்களுடன்;

யாழ் ரமணனின்
ராஜன்ஸ் இசையில்

**"இன்னிசை மழை"**

இடம்:- யாழ் பரியோவான் கல்லூரி மண்டபம்
காலம்:- 14. 04. 1994
நேரம்:- பி. ப. 2. 00 மணி
அன்பளிப்பு:-50/- 30/- 20/-
"நன்னாளில் நற்பணிக்கு உதவிடுவீர்"

---

நிகழ்ச்சி சிறக்க எமது
வாழ்த்துக்கள்

பாசையூர்,
கொழும்புத்துறை.
வர்த்தக சங்கம்.

எரிக் கணேஷ்
566, ஆஸ்பத்திரி வீதி,

நீங்காது துயரம் ஓராண்டே கடந்தாலும்
நாங்காது கவலை, ஆறுதலே கூறிடுவாய்;

அன்னசத்திர வேன், பிரிவால் துயருறும்,
கந்தர்மடம், மனைவி, பிள்ளைகள்
யாழ்ப்பாணம்; பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

(8018)

திண்ணம் மிகுந்து புறப்பட்ட வீரனே
வண்ணம் மிக்க உன்முகம் தேடி - நம்
கன்னம் மீது விழிநீர் படருதே;

25, சரன் வீதி
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்

(8030)


இன்னல்கள் நீங்கி இல்லம் மகிழ்ந்து
நாடு சிறக்க நல்வாழ்த்துக்கள்

# நியூ விமாகி

உங்கள் சகல கட்டிடங்களையும் அலங்கரிக்கத் தேவையான சகல வகை பெயின்ட் அயிட்டங்களையும்
(Paint Items) பெற்றிட
விரைந்து நாடுங்கள்!

* டியூலக்ஸ் எமல்சன் (DULUX Emulsion Water Paint)
* டுயூலக்ஸ் எனாமல் (DULUX Enamel Oil Paint)
* டியூக்கோ - ஸ்பிரேபெயிண்ட் (DUCO Spray Paint)
* வானிஸ் (Varnish)

மற்றும் காப்போட் சீட், பேபி கிபொன்ஞ், பொமிக்கா சீட், சைக்கிள் உதிரிப்பாகங்களை நீங்கள்
தெரிவு செய்ய நாடும் இடம்

## நியூ விமாகி
## NEW VEMAKI

27/3, மின்சார நிலைய வீதி, (இ-9136) யாழ்ப்பாணம்.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

14-04-94



### செல்வன் ஜனார்த்தன்

புத்தூர் கிழக்கு சொக்கதிடலைச் சேர்ந்த நடேசன் - பகவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜனார்த்தன் 14-04-94 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், சுவிஸ்ஸில் இருக்கும் பிறேம் அண்ணா மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்த்துகின்றனர்;

(இ-8028)

எரிக் கணேஷ்
566, ஆஸ்பத்திரி வீதி,
(8035) யாழ்ப்பாணம்


## கலை வர்த்தக கல்லூரி
## C.C.A

வெலிங்டன் சந்திக்கு
அருகாமை
யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு
(கலை,
வர்த்தகம்)

ஆரம்பம்;
16-04-94
காலை 8.00மணி

1. எமது வழமையான ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படுகிறது;
2. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதனால் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்;

நிர்வாகி

(இ-9155)

சிறந்த பட்டுப்புடவைகளுக்கு பெயர்பெற்ற ஸ்தாபனம்

# லலிதா பட்டுச்சோலை

இல 5, 6, நவீன சந்தை யாழ்ப்பாணம்,
[இன்றே விஜயம் செய்யுங்கள்.] (இ-9047)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;